# ‘நீட்’ தேர்வு: ஒன்றிய அரசு–ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரத அறப்போராட்டம்!





விழுப்புரம் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில், நீட் தேர்வை எதிர்த்து விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி மைதானத்தில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ தலைமையில் நடைபெற்றது. உண்ணாவிரதத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கே, எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இரா. இலட்சுமணன், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, உள்களிட்ட கழகத்தினர்,கல்லூரி மாணவ மாணவிகள், பள்ளி மாணவ, மாணவிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



‘நீட்’ தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு – ஆளுநரைக் கண்டித்து தூத்துக்குடியில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது. இதனை அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.



நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் நீட் தேர்வுக்கு ஆதரவாக செயல்படும் தமிழ்நாடு, புதுச்சேரி ஆளுநர்களைக் கண்டித்து புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், கழக அமைப்பாளருமான இரா. சிவா தலைமையில் சுதேசி மில் அருகில் நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் 500 க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் பங்கேற்றனர். உடன் அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், கழக கொள்கைப் பரபரப்பு செயலாளர் சபாபதி மோகன், தமிழ்நாடு மாநில மாணவரணி துணை செயலாளர் அமுதரசன், மாணவரணி அமைப்பாளர் மணிமாறன், மருத்துவ அணி ஆனந்த ஆரோக்கியராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. கல்யாணி குமார், நித்தீஷ், தாமரைக்கண்ணன், கிருபாசங்கர், சந்துரு, பஜீலுதீன், அகிலன், மாநில மகளிர் அணி நிர்வாகிகள் புஷ்பலதா, ஜான்சிராணி, அல்போன்சா, சூர்யா, ரமா, சுமித்ரா, தனலட்சுமி, சந்திரகலா மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்துகொண்டனர்.



சிவகங்கையில் ஒன்றிய அரசு நீட் தேர்வு விலக்கு அளிக்கக் கோரி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகினி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தினை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.துவக்கிவைத்தார். இதில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் குமரேசன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், மாரியப்பன்கென்னடி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.







ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பாக நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசு மற்றும் ஒப்புதல் வழங்காத தமிழக ஆளுநரைக் கண்டித்து, மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் வேளாண்மை மற்றும் உழவர்நலத் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ.ஐயப்பன், மேயர் சுந்தரி ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இள.புகழேந்தி, மருதூர் இராமலிங்கம், துரை.கி.சரவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், எம். எஸ்.கணேஷ்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். கடலூர் மாநகரக் கழகச் செயலாளர் கே.எஸ்.ராஜா நன்றியுரையாற்றினார்.



நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து, நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தபோது.



தமிழ்நாட்டில் நீட்தேர்வை ரத்துசெய்திட வலியுறுத்தி வேலூர் காந்திசிலை முன் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மாவட்டகழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ, நகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் இளைஞர் அணி,மாணவர்அணி,மருத்துவ அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், இ.ஜி சுகவனம், எம்.வி வெற்றிச்செல்வன், ஓசூர் மாநகர மேயர் சத்யா,பி.முருகன சீனிவாசன், மாநில டேம்.வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மாலதி நாராயணசாமி , மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ் , யுவராஜ் , மற்றும் கிழக்கு மேற்கு மாவட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.